மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

# Varagasim Puluvar Thirupukal - A Study

**Dr. Suhanya Aravinthon**

Senior Lecturer, Department of Music, University of Jaffna, Sri Lanka.

Manuscript ID : **MT38A0019**

Volume : **2**

Issue : **2**

Month : **June**

Year : **2022**

Received: 29.12.2021

Revised: 06.01.2022

Accepted: 30.06.2022

Published: 30.06.2022

Pages : 7-14

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 4.0 International (CC BY-NC-SA 4.0) International License

OPEN ACCESS

## ABSTRACT:

Tirupukal is one of the most devotional musical forms in Tamil music. This devotional musical form sticks with some musical elements in inseparable. This musical elements take precedence than praising and worshiping the Lord through chanting. Arunagirinathar, who appeared in the 8th century AD and taught Murugan to chant, is credited with introducing the chant to the Tamil music world. Arunagiri is better known as 'Chandappavalar Peruman'. No one created like it as he used the chants in his Thiruppugalz. But some of the Musi cal personalities who originated this musical style in Tamil music have followed Arunagirinathar and found success in manipulating in their works. Although many poets have come to Tamil Nadu in this way, other religions have taken the turning point of Arunagirinathar as the guide to their works beyond the confines of religion. Varagasim Puluvar, a convert to Islam, was the foremost in this regard. He also wrote literary works like Arunakiri. This research Article try to express Vara kaasipulavar conceder arunakirinaathar as his guide for his literary works.

## KEYWORDS:

Thiruppukal, Chandakkulippu, Pannamithi, aivakai Chandakkulippu, Uvamai, Uruvaham.

## REFERENCES :

1. Seiyuthu Muhamad. M., 'Hasan', Enaya Islamic Thiruppugal, Vara Kavi Kasim Pulavar Thiruppugal Aaivu, Musthaffa Meera Publications, Chennai, 1983.
2. Angayatkanni. R., Thiruppugal Paadalkalil Chanda Koorugal, Kaliyagam Publications, Chennai, 1989.
3. Sellappanaar. S. Kasim Pulavar Thiruppugal- Or Aaivu, Musthaffa Meera Publications, Chennai, 1983.
4. Mohammadpur Raghuman Lebbai Alim, Thiruppugal, Kalaarathnaagara Publications, Chennai, 1914.
5. Guru Namasivayam. J. M., Thirupugal, Kalaiyagam Publications, Chennai, 1974.

தொகுதி-2 பதிப்பு-2 ஜூன் 2022 | E-ISSN: 2583-0449

# வரகாசிம் புலவர் திருப்புகழ் - ஓர் ஆய்வு

**முனைவர் சுகன்யா அரவிந்தன்**

*முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை,*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை*

## கட்டுரைச் சுருக்கம்

தமிழிசைப்பாடல்களுள் சந்தச்சிறப்பு மிக்க பாவடிவமாக திருப்புகழ் விளங்குகின்றது. சந்தத்தின் வழியாக இறைவனைப்புகழ்வதும் வழிபடுவதுமாக இப்பாவடிவம் முதன்மை பெறுகின்றது. தமிழிசை உலகிற்கு சந்தத்தின் சிறப்பை அறியச்செய்த பெருமை கிபி 8ம் நூற்றாண்டிலே தோன்றி சந்தத்தால் முருகனைப்; பாடிப்பரவிய அருணகிரிநாதர் அவர்களையே சாரும். சந்தப்பாவலர் பெருமான் என சிறப்புப்பெயர் பெற்றவர் அருணகிரியார். அவர் சந்தப்பொழிவுகளை பாடல்களிலே பயன்படுத்தியதுபோன்று எவருமே படைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்தச்சந்தத்தை தமிழிசைமரபிலே தோற்றம்பெற்ற சில வாக்கேயகாரர்கள் அருணகிரிநாதரைப்பின்பற்றி சந்தங்களைத் தம்முடைய படைப்புக்களிலே கையாண்டு வெற்றியும் கண்டிருக்கின்றார்கள். இந்தவகையிலே பல புலவர்கள் தமிழ்மரபிலே வந்து சென்றிருந்தாலும் மதம் என்கின்ற வரம்புக்கப்பால் ஏனைய சமயத்தவரும் தம்முடைய படைப்புக்களுக்கு வழிமுதலாக அருணகிரிநாதருடைய திருப்புகழை எடுத்தாண்டிருக்கின்றார்கள். இந்தவகையிலே இஸ்லாமிய மதத்தைச்சேர்ந்த வரகாசிம் புலவர் முதன்மையானவர். திருப்புகழ் என்கின்ற பதத்திலேயே தன்னுடைய படைப்புக்களையும் இலக்கியச்சுவை சொட்டப்படைத்தவர். இதற்கு அவருடைய படைப்புக்கள் அனைத்தும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும். அருணகிரிநாதர் அவர்களுடைய திருப்புகழ்ச்சந்தங்ளையே அப்படியே தன்னுடைய படைப்புக்களிலும் பயன்படுத்தி நபியவர்களுடைய சிறப்பைப்பாடியிருக்கின்றார்.

இந்த வகையிலே சைவத்தமிழ் மரபிலே முக்கிய இடம்பெறுகி;ன்ற அருணகிரிநாதர் அவர்களுடை திருப்புகழ் வடிவங்களை வரகாசிம்புலவர் கையாண்டிருக்கின்ற விதம்பற்றி எடுத்தாராய்வதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது. இதன்பயனாக திருப்புகழ் என்கின்ற சந்தப்பாவடிவம் பற்றிய விரிந்த பார்வையினைப் புரிந்துகொள்ளமுடியும் என்பதில் ஐயமில்லை.

## கருச்சொற்கள்

**திருப்புகழ், பாவடிவங்கள், சந்தக்குழிப்பு, பண்ணமைதி, ஐவகை சந்தக்குழிப்புகள், உவமை, உருவகம்.**

## முன்னுரை

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த 'சந்தப்பாவலர் பெருமான்' என்று போற்றப்படும் அருணகிரிநாதசுவாமிகள் முருகப்பெருமான் பேரில் பல்லாயிரக்கணக்கான திருப்புகழ்ப்பாடல்களை இயற்றி இசைத்தமிழுக்குத் தொண்டு செய்தார். பிற்காலத்தில் இவரைப் பின்பற்றிப் பல புலவர்கள் அவரவர் வழிபடும் தெய்வங்கள் மீது திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியுள்ளனர். இந்து சமயமேயன்றி பிற சமயத்தைச் சேர்ந்த புலவர்களும் இவ்வாறு திருப்புகழ் பாடல்களை இயற்றி மகிழ்ந்துள்ளனர். இவ்வகையில் இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்கள் திருப்புகழ் அமைப்பில் எழுதப்பட்டுள்ள பாடல்கள் குறிப்பிட்டுக்கூறத்தக்கனவாகும். இந்தவகையிலே இஸ்லாமியப்பண்பாட்டின் பின்னணியிலிருந்து தேற்றம்பெற்ற திருப்புகழ் அமைப்பினை ஒத்த பாடல்களை இயற்றியவர்கள் வரிசையில் முதன்மையாக வைத்துப் போற்றத்தக்கவர் கிபி 18ம் நூற்றாண்டில் வாழ்ந்த இஸ்லாமியப் புலவரான காசிம்புலவர் ஆவார்.

காசிம்புலவரைப் பின்பற்றி அப்துல் காதுறுப்புலவர், கோட்டாறு ஞானியார் சாகிபு, திருச்சி ஆ.கா. பிச்சை இபுறாகிம் புலவர் முதலான 13க்கும் குறையாத திருப்புகழ்ப் பாவகைகளை இயற்றிய பல்வேறு இஸ்லாமியப்புலவர்களை இஸ்லாமிய பண்பாட்டுமரபிலே இனம்கண்டுகொள்ள முடிகின்றது. இருப்பினும் தமிழ்பேசும் முஸ்லிம்களிடையே திருப்புகழ் என்றாலே காசிம்புலவருடைய திருப்புகழ் ஒன்று மாத்திரமே முதன்மைபெற்று நிற்பதைக்காணமுடிகின்றது. இஸ்லாமியப் பெரும்புலவர்களுள் ஒருவரான ஜவாது புலவர் என்பவர் காசிம்புலவர் மறைந்து சில ஆண்டுகளுக்குப் பின்னர் 200 திருப்புகழ்ப் பாடல்களை இயற்றி அவற்றை அரங்கேற்றம் செய்யும் நோக்கத்துடன் காயல் பட்டணம் சென்றார். அங்கு காசிம் புலவரின் குமாரர்கள் இருவரும் தம் தந்தையாரின் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர். இதைக்கேட்ட ஜவாதுப்புலவர் செம்பாகமான அக்கவிகளுக்கு முன்னே கரும்பாகமாகிய தம்முடைய கவிகள் இருப்பது நல்லதல்ல என்று கருதி தம்முடைய திருப்புகழ்ப் பாடல்கள் அடங்கிய ஏட்டை பாக்குவெட்டியினால் வெட்டி அழித்துவிட்டார் என்ற ஒரு வரலாறு உண்டு.

இத்தகு சிறப்பு வாய்ந்த காசிம்புலவரின் திருப்புகழ்ப் பாடல்களை இசை நோக்கில் ஆராய்வது இக்கட்டுரையின் முக்கியநோக்கமாகும்.

## காசிம்புலவரது திருப்புகழ் அமைப்பு

'திருப்புகழ்' என்னும் சொல் 'இறைவன் புகழ்பாடுதல்' என்ற பொதுவான பொருளில் அமைந்திருந்தாலும் இசை உலகில் அருணகிரிநாதர் இயற்றிய சந்தப்பாடல்களுக்குச் சிறப்புப்பெயராக அமைந்துள்ளது எனலாம். அருணகிரிநாதர் தாம் வழிபடுகின்ற தெய்வமான முருகப்பெருமானது புகழ் பாடுவது போன்றே காசிம்புலவர், நபிகள் நாயகத்தின் புகழ்பாடுவதாக 141 திருப்புகழ்ப் பாடல்களை இயற்றியுள்ளார். இவையனைத்தும் நபிகள்நாயகத்தின் பெருமை, புலவர் தம்முடையதாகச் சொல்லும் பாவச்செயல்கள், அப்பாவச்செயல்களை மன்னித்துத்தம்மை ஆட்கொண்டருளுமாறு வேண்டுதல் என்னும் பொருள்களை உள்ளடக்கமாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. அருணகிரிநாதரைப் போன்றே காசிம்புலவரும் தம் திருப்புகழ் முதற்பகுதியில் சிற்றின்பத்தையும் பிற்பகுதியில் பேரின்பத்தையும் வைத்துப் பாடியுள்ளார்.

திருப்புகழ்ப் பாடல்கள் இசைத்தமிழில் கிருதி, கீர்த்தனை, பதம், ஜாவளி போன்ற இசை உருப்படிகளின் அமைப்பைப் போன்றல்லாது பெரும்பான்மையான பாடல்கள் எட்டுப்பிரிவுகளைக் கொண்டதாக அமையக்காண்கிறோம். இதைக் 'கண்டிகை' என்றும் 'சரணங்கள்' என்றும் கூறலாம்.

காசிம்புலவர் திருப்புகழில் பொதுவாக ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு வரிகள், மூன்று வரிகள் அமைந்துள்ளன.

சான்றுகளாக,

1. பழைய பெரியோர்ப கர்ந்த (பாடல் எண் 6, இரண்டு வரி கொண்டது)
2. பகரு முருவிலி (பாடல் எண் 1, மூன்று வரி கொண்டது)

திருப்புகழ்ப்பாடல்களின் ஒவ்வொரு பிரிவும் ஒரு குறிப்பிட்ட சந்தம் மூன்று முறை மடங்கி வந்து இறுதில் 'தனதானா' என்னும் சந்த அமைப்புடைய தனிச்சொல்லுடன் முடிவுறுவதாக அமைகின்றது. காசிம்புலவர் திருப்புகழில் ஒவ்வொரு பாடலும் 'இறசூலே' என்னும் தொங்கலுடன் முடிவுறுகின்றமை சிறப்புக்குரியதொன்றாகும். இது எவ்வாறு தங்கப்பதக்கத்தில் மரகதக்கல் பிரசாசிக்கின்றதோ அவ்வாறே துலங்குகின்றது. இசைமரபிலே இது 'தொங்கல்' எனப்படுகின்றது.

## காசிம்புலவர் திருப்புகழ் சந்தங்களும் தாளங்களும்

திருப்புகழ்ப்பாடல்கள் எழுத்துக்களின் ஓசை அடிப்படையிலும், மாத்திரை அடிப்படையிலும் வேறுபாடு கொண்டு விளங்குகின்றன. இவற்றை தன, தான, தந்த போன்ற அசைச்சொற்களைக் கொண்டு குறிப்பிடுவர். இதனையே தொல்காப்பியர்

'வண்ணம்' என்று குறிப்பிடுகின்றார். பிற்கால நிகண்டுகள் 'சந்தம்' என்னும் பெயரில் குறிப்பிடுகின்றன. 'மருவிட வண்ணஞ் சந்தம் வடிவின்பேர் செண்ணமாமே' (சூடாமணி நிகண்டு 27 ஆம் செய்யுள்) திருப்புகழ்ச் சந்தங்களுக்கு இரண்டெழுத்தளவுடைய தன, மூன்று எழுத்து அளவுடைய தனன, நான்கு எழுத்தளவுடைய தனதன, ஐந்து எழுத்தளவுடைய தனதனன, ஏழு எழுத்தளவுடைய தனன தனதன, ஒன்பது எழுத்தளவுடைய தனதன தனதனன ஆகியவை அடிப்படைச் சந்தங்களாக விளங்குகின்றன.

காசிம்புலவர் திருப்புகழில் தனன, தந்த, தத்த, தாந்த, தாத்த என்ற மூன்று அளவுடைய சந்தக்குழிப்புகளையும், தனதன, தானத், தானன, தத்தத், தனத்த, தனந்த, தனனா, தனனத், தத்தன, தந்தா, தந்தன, தானா, தாந்தந், தாத்தத், தந்தத் என்ற நான்கு அளவுடைய சந்தக்குழிப்புக்களையும், தனத் தத்தத், தான தானன, தத்த தந்தன, தனத் தந்தந், தனன தந்தன, தந்த தானன என்ற ஏழு அளவுடைய சந்தக்குழிப்புக்களையும், தனனதன, தனதனத், தந்தனத், தனதான, தானனத், தானான, தனத்தந், தானதன, தானதந், தனத்தத், தந்ததன, தந்தந்த தய்யான என்ற ஐந்து அளவுடைய சந்தக்குழிப்புக்களையும், தனன தனதந்தத் என்ற ஒன்பது அளவுடைய சந்தக்குழிப்பையும் காண்கின்றோம். இவ்வளவுகள் இசை மரபில் மும்மை (திஸ்ரம்), நான்மை (சதுஸ்ரம்), ஐம்மை (கண்டம்), எழுமை (மிஸ்ரம்), ஒன்பான்மை (சங்கீர்ணம்) என்று வழங்கப்படுகின்றன. இவ்வைந்து அளவுகளும் ஜாதி, கதி என்னும் பெயர்களில் கருநாடக இசையில் வழங்கப்படுகின்றன.

திருப்புகழ் பாடல்கள் அனைத்தும் தாள இலக்கணத்தில் மேற்கூறிய ஐந்து ஜாதிகளையும் அவற்றின் விரிவுகளையுமே விளக்குவனவாக அமைந்துள்ளன. காசிம்புலவர் திருப்புகழில் சங்கீர்ண ஜாதியை தவிர்த்த பிற ஜாதிகளைப் பாடல்களாகவே கொண்டமைந்த பாடல்களும் உண்டு.

சான்றுகள்:

1. இருள் கனிந்த நெய்த்த (பாடல் எண் 95 திஸ்ரநடை)
2. அறநிலை தப்பிப்பிழைத்த பாவிகள் (பாடல் எண் 9, சதுஸ்ர நடை)
3. ஒருவருக் கருமுடற் பிணிதணித் (பாடல் எண் 4, கண்ட நடை)
4. மழலையி னிசைய (பாடல் எண் 16, மிஸ்ரநடை)

இவற்றைத்தவிர இவ்வைந்து ஜாதிகளின் கலப்புக்களிலும் காசிம் புலவரின் பாடல்கள் காணக்கிடைக்கின்றன.

சான்றுகள்:

1. தனதன தனந்தன தந்த பிறர்மனை விழைந்து மண்டி 4 (பாடல் எண் 12, 4+4+3= 11 எண்ணிக்கை கொண்ட பாடல்)
2. தனன தனதன தனதன தனதன அகர முதலவனருள் பணி விடை தனின் 5 (பாடல் 2, 3+4+4+4= 15 எண்ணிக்கை கொண்ட பாடல்)
3. தனத்தந் தானன தானன தானன செழிக்குங் காரநல் வேள்படை வீடினி 6 (பாடல் 19, 5+ 4+4+4= 17 எண்ணிக்கை கொண்ட பாடல்)

## அருணகிரிநாதர் சந்தங்களுடன் காசிம்புலவர் சந்தங்களும் ஒப்பீடு

அருணகிரிநாதர் பயன்படுத்திய சந்தங்களைப் பின்பற்றியே காசிம்புலவர் பாடிய பாடல்கள் ஆறு உள்ளன. அவை வருமாறு,

1. 'முத்துத் தனு தித்தித் தெளிவொளி' எனத் தொடங்கும் பாடல் 'தத்தத் தன தத்தத் தனதன' என்னும் சந்த அமைப்பில் உள்ளது. இப்பாடல் அருணகிரியார் இயற்றிய இதே சந்த அமைப்புடைய 'முத்தைத்தரு பத்தித்திருநகை' என்கின்ற திருப்புகழின் சந்த அமைப்பினை ஒத்ததாக அமைக்கப்பட்டிருக்கின்றது.
2. 'செகத்திற் கருக்கட் டுடைப் பொய்ப் பிரட்டிற் சதித் தெட் டிருட்டுற் கொடிதான' எனத் தொடங்கும் பாடல் 'தனத்தத் தனத்தத்' என்னும் அடிப்படைச் சந்தம் மூன்று முறை மடங்கி 'தனதானா' என்னும் தொங்கலுடன் முடிவுறும் அமைப்பில் உள்ளது. இது இதே சந்த அமைப்புடைய 'குடத்தைத் தகர்த்து' (பாடல் எண் 343) என்னும் அருணகிரிநாதர் இயற்றிய 'திருக்கற்குடி' தலப்பாடலை அடியொற்றி அமைந்துள்ளது.
3. 'அளகபார மீதாட வதனசோதி வோவாட வதரமூறு தேனாட விடையான' எனத்தொடங்கும் பாடல் 'தனனாதான தானான' என்னும் அடிப்படைச் சந்தம் மூன்று முறை மடங்கி, 'தனதான' என்னும் தொங்கலுடன் முடிவுறும் அமைப்பில் உள்ளது. இப்பாடல் இதே சந்த அமைப்புடைய 'அதலசேட னாராட' (பாடல் எண் 1292) என்னும் அருணகிரிநாதர் திருப்புகழை அடியொற்றி அமைந்துள்ளது.
4. 'இடர்சூழி ருட்டி ரைகேழு தட்டி னினடையேவெ ருட்டி யடர்நாக' எனத்தொடங்கும் பாடல் 'தனதான தத்த' என்னும் அடிப்படைச் சந்தம் மூன்று முறை மடங்கி 'தனதானா' என்னும் தொங்கலில் முடிவும் அமைப்பில் உள்ளது. இப்பாடல் இதே சந்த அமைப்புடைய 'மருவே செறிந்த' (பாடல் எண் 230) என்னும் அருணகிரிநாதர் திருப்புகழை அடியொற்றி அமைந்துள்ளது.
5. 'அலரிமிசை தமதுதிரு நாமம் பதித்தவரு' எனத்தொடங்கும் பாடல் 'தனனதன தனனதன தானந் தனத்ததன' என்னும் அடிப்படை சந்தம் மூன்று முறை மடங்கித் 'தனதானா' என்னும் தொங்கலுடன் முடிவுறும் சந்த அமைப்பில் திகழ்கிறது.

இப்பாடல் இதே அமைப்பில் காணப்பெறும் 'அகரமுத லெனவுரைசெய்' (பாடல் எண் 1007) என்னும் அருணகிரிநாதர் திருப்புகழை அடியொற்றி அமைந்துள்ளது.

6. 'மானாரிடத்திக் வெகு பேராசை வைத்தமிர்த வாயூறி நிற்கு மொரு - வினையாளா' எனத்தொடங்கும் பாடல் 'தானான தத்தன' என்னும் அடிப்படை சந்தம் மூன்று முறை மடங்கித் 'தனதானா' என்னும் தொங்கலுடன் முடிவுறும் சந்த அமைப்பில் திகழ்கிறது. இப் பாடல் அதே அமைப்பில் காணப்படும்

'கூர்வேல் பழித்தவிழி' (பாடல் 266) என்னும் அருணகிரிநாதரின் திருப்புகழை அடியொற்றி அமைந்துள்ளது,

அருணகிரிநாதரைப் போலவே காசிம்புலவரும் துந்துபி, கொம்பு, பம்பை, திண்டியம், தூரியம், பேரிகை, கிணாரம், கிண்கிணி, முழவு, பதலை, துடி, வங்கியம், திமிலை முதலிய பல்வேறு இசைக்கருவிகளைக் குறிப்பிட்டு, அவற்றின் ஒலிகளையும் சொற்கட்டுக்களாகப் பாடல்களில் அமைத்துள்ளார்.

சான்றாக,

'இளமை நின்று கழிந்து நாள்களின்' (பாடல் எண் 122) எனத்தொடங்கும் பாடலின் 5, 6 ஆம் சரணங்கள்

**'களமெழுந்திசை கொம்பு தூரிய**

**முருடு டுண்டுடு டுண்டு டூடுடு**

**தனன தந்தன வென்ற மோகர மடர்தாளந்**

**தகுணி துந்துமி திந்தி தோதிமி**

**டிகுகு டிங்குகு டங்கு பேரிகை**

**தமர கிண்கிணி கிண்கியாரமு மிகுமோதை'**

## காசிம்புலவரின் இசைத்தமிழ்ப்புலமை

காசிம்புலவர் தம்மைப் பற்றித் தம்பாடல்களிலேயே குறிப்புத் தந்துள்ளார் (பாடல் எண் 141) இக்குறிப்பிலிருந்து காயல் பட்டணத்தில் வாழ்ந்த ஜலாலுத்தீன் என்பாரின் மகன் இப்ராஹீம். இப்ராஹீமின் மகன் ஜையினுல் ஆலிதீன். அவருடைய மகன் காழி நூருத்தீன். இந் நூருதீனின் புதல்வரே காசிம்புலவர் என்றறிய முடிகிறது. மேலும், பாடல் எண் 48 இல் தாம் பால், தேன், பாகு போன்றவற்றிற்கு ஒப்பான சொற்களாலான பாடல்களைக் கொண்ட தமிழ்மாலைகளைப் பாட்டிலக்கணம் தவறாமல் பாடக்கூடியவர் என்றும் குறிப்பிட்டுகிறார். பாடல் எண் 6 இல் பரணி, மடல், கோவை, சந்தம்,

விறலிவிடு தூது, சிந்து, பனுவல் வகைபோன்ற பல்வேறு பாவகைப் பெயர் குறிப்பிலிருந்து காசிம்புலவர் தமிழிலுள்ள பல்வகைப்பனுவல்களில் ஆழ்ந்த புலமை கொண்டவர் என்றறிய முடிகின்றது. மேலும் இசையொழுகு பாட்டினியல் பாடி(61) 'கீர்த்தனம் புகல்' (79) போன்ற குறிப்புக்களிலிருந்து இசைத்திறமையும், மொழிப்புலமையும் ஒருங்கே பெற்றிருந்தவர் என்றறியலாம்.

காசிம்புலவர் திருப்புகழில் உள்ள உவமை, உருவகம், கேட்பவரைப் பிரமிக்க வைக்கும் சொல்லாட்சி போன்றவை இப்பாடல்களை உயர்ந்த இலக்கிய நிலைக்கு இட்டுச்செல்கின்றன.

சான்றுகள்,

'கைக்குளேழுதிய' (116) எனத்தொடங்கும் பாடலில் 'தனதன' என்ற சந்தத்திற்கு

**மடலிகள் - நடலிகள்**

**குழலிகள் - விழலிகள்**

**ஆசடிகள் - கசடிகள்**

**முகடிகள் - சிகடிகள்**

**முதடிகள் - பதடிகள்**

என்றவாறு சொற்கள் அடுக்கப்பட்டு பாடலுக்கு அணி செய்கின்றன.

'வலையிட பட்டக' (22) எனத் தொடங்கும் பாடலில், வேடனின் வலைக்குள் அகப்பட்ட காகத்தைப் போலவும் தோண்டப்பட்ட குழிக்குள் வீழ்ந்துவிட்ட யானைபோலவும், நீர்வளம் வறண்டு போன பூங்காவனத்தைப் போலவும், மழைத்துளி காணாத பயிரின் வாடிய முகம் போலவும், இடியோசைக் கேட்ட பாம்புக்கூட்டம் போலவும், இளமையி;ல வறுமையால் பீடிக்கப்பட்ட மக்கள்போலுவும், சூறைக்காற்றில் அகப்பட்ட மரக்கலம் போலவும், மதுவுண்ட வெறியில் அறிவு மயங்கிய பித்தனைப் போலவும், மனம் தத்தளிக்குமென உவமைகளின் அடுக்குக் கையாளப்பட்டிருப்பது சிறப்பு.

**'மாய மருந்துசெய் மோசக் காரிகள்'**

எனத் தொடங்கும் பாடலில், நிலத்தைப் பெண்ணாக்கி, பாய்கின்ற அலைகளை அவளுடைய வெண்மையான ஆடையாகவும், பெரிய மலைகளை தனங்களாகவும், நிறைந்தோடும் ஆற்றினைப் பருத்த மணிபதித்த மாலையாகவும், வானிலே அலைகின்ற மேகத்தைக் கருமுகிலாகவும் கவிஞர் உருவகம் செய்துள்ளார்.

## முடிவுரை

இத்தகு சந்தச் சிறப்பும், கவிதைச்சிறப்பும். இசைச்சிறப்பும் கொண்ட காசிம்புலவரின் திருப்புகழ், இசையோடு வெளிப்பட்டவை என்பது கண்கூடு. இருப்பினும் இப்பாடல்களின் மரபு வழிப்பட்ட இசைமுறை அறியமுடியவில்லை. இப்பாடல்களுக்குரிய பண் (இராகம்), தாளம், பாடுமுறை, பாடியவர்கள் குறித்த செய்திகள் தனித்தொரு ஆய்வினுக்கு வழிகோலும். இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கிச் செல்லும் இத்தருணத்தில் இசையார்வம் மிக்க இஸ்லாமிய ஆய்வாளர்கள் இப்பணியினை செவ்வனே நிறைவேற்ற இயலும்.

## துணைநூற்பட்டியல்


1. Seiyuthu Muhamad. M., ‘Hasan’, Enaya Islamic Thiruppugal, Vara Kavi Kasim Pulavar Thiruppugal Aaivu, Musthaffa Meera Publications, Chennai, 1983.
2. Angayatkanni. R., Thiruppugal Paadalkalil Chanda Koorugal, Kaliyagam Publications, Chennai, 1989.
3. Sellappanaar. S. Kasim Pulavar Thiruppugal- Or Aaivu, Musthaffa Meera Publications, Chennai, 1983.
4. Mohammadpur Raghuman Lebbai Alim, Thiruppugal, Kalaarathnaagara Publications, Chennai, 1914.
5. Guru Namasivayam. J. M., Thirupugal, Kalaiyagam Publications, Chennai, 1974.